தமிழச்சி தங்கபாண்டியன்

தென்சென்னை நாடாளுமன்ற உறுப்பினர்

நாள் : 13.03.2023

# இளைஞர்கள் திறன் மேம்பாட்டுப் பயிற்சித் திட்டத்தை நடைமுறைப்படுத்த ஒன்றிய அரசு உத்தேசித்துள்ளதா ?

# திமுக எம்பி தமிழச்சி தங்கபாண்டியன் ஒன்றிய அரசுக்கு கேள்வி

**மக்களவையில் தமிழச்சி தங்கபாண்டியன் எழுப்பிய கேள்வி விவரம் வருமாறு:**

இளைஞர்களுக்கு வேலை வாய்ப்புகளை அளிக்கும் வகையில் திறன் மேம்பாட்டுப் பயிற்சியை நடைமுறைப்படுத்த ஒன்றிய அரசு உத்தேசித்துள்ளதா?

குறிப்பாக மென்பொருள் பயிற்சி, மின்னணு டிசைன், புள்ளிவிவரங்கள், எந்திர அறிவு, கிளவுட் கம்ப்யூட்டிங், ட்ரோன்ஸ், 3டி பிரிண்ட்டிங், ஐஓடி, மெக்கட்ரானிக்ஸ், ரோபோடிக்ஸ், ஏ1 கோடிங், எஸ்எப்எக்ஸ், ஈஎப்எக்ஸ், செயற்கைப் புலனாய்வு போன்றவற்றில் திறன் மேம்பாட்டுப் பயிற்சி இளைஞர்களுக்கு வழங்கப்படுமா?

அவ்வாறு பயிற்சி வழங்கப்படும் எனில் பிரதம மந்திரி கௌசல் விகாஸ் யோஜனா 4.0 (பி.எம்.கே.வி.ஒய்.) திட்டத்தை நடைமுறைப்படுத்த ஒன்றிய அரசு உத்தேசித்துள்ளதா? அவ்வாறு உத்தேசித்துள்ளது என்றால் தொழில் பயிற்சி நிறுவனங்கள் மற்றும் (பி.எம்.கே.வி.ஒய்.) பயிற்சி மையங்களில் அவர்களுக்குப் பயிற்சி அளிக்க மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கை விவரங்களைத் தெரிவிக்க வேண்டும்.

இளைஞர்களுக்கு சர்வதேச அளவில் வேலை வாய்ப்புகளை உருவாக்கும் வகையில் நமது நாட்டின் பல்வேறு மாநிலங்களில் 30 சர்வதேச தரத்திலான பயிற்சி மையங்களை அமைக்க ஒன்றிய அரசு உத்தேசித்துள்ளதா? அத்தகைய உத்தேசத் திட்டம் ஏதும் இருப்பின் அதைப் பற்றிய விவரங்களைத் தெரிவிக்க வேண்டும்.

தொழில்முனைவோர் திட்டங்களை ஊக்குவிக்கும் வகையில் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவன உரிமையாளர்கள் ஆகியோருக்குத் தேவையான அளவில் ஒருங்கிணைந்த திறன் மேம்பாட்டு டிஜிட்டல் தளங்களை அமைப்பதற்கு ஒன்றிய அரசு உத்தேசித்துள்ளதா?

உத்தேசம் இருப்பின் அதைப்பற்றி விவரங்களைத் தெரிவிக்க வேண்டும். மேலும் பிஎம்கேவிஒய் திட்டம் துவங்கப்பட்டதிலிருந்து நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் திட்டங்களின் முன்னேற்றம், அத்திட்டங்களுக்கான நிதி ஒதுக்கீடு, அந்த நிதி ஒதுக்கீட்டில் செலவிடப்பட்ட தொகை ஆகியவை குறித்து ஆண்டு வாரியான விவரம் தெரிவிக்க வேண்டும்.

கடந்த எட்டு ஆண்டுகளில் எத்தனை மாணவர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டது என்ற விவரம் ஆண்டுவாரியாக மற்றும் மாநிலங்கள் வாரியான விவரம் தெரிவிக்கப்பட வேண்டும். மேலும் ஆண்டுதோறும் 20 லட்சம் இளைஞர்களுக்கு திறன் மேம்பாட்டுப் பயிற்சி அளிக்க ஒன்றிய அரசு மேற்கொண்டுள்ள நடவடிக்கைகளின் விவரங்களைத் தெரிவிக்க வேண்டும்.

**திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர் தமிழச்சி தங்கபாண்டியன் எழுப்பிய கேள்விக்கு ஒன்றிய அரசின் திறன் மேம்பாடு மற்றும் தொழில்முனைவோர் துறை அமைச்சர் தர்மேந்திர பிரதான் அளித்த பதில் விவரம் வருமாறு:**

பிஎம்கேவிஒய் திட்டத்தை ஏற்கெனவே செயல்படுத்திய அனுபவம் மற்றும் தற்போதைய தேவை ஆகியவற்றின் அடிப்படையில் ஒன்றிய அரசின் திறன் மேம்பாடு மற்றும் தொழில்முனைவோர் துறை அமைச்சகத்திற்கு பிஎம்கேவிஒய் திட்டத்தை மாற்றியமைத்து

பிஎம்கேவிஒய் 4.0 என்ற பெயரில் செலவின நிதிக்குழு (ஈஎப்சி) பரிந்துரை செய்துள்ளது. அதன்படி நவீன காலத் தேவைக்கு ஏற்ற 4.0 கோடிங், ஏ1, ரொபாட்டிக்ஸ், மெகட்ரானிக்ஸ், ஐஓடி , 3டி பிரிண்ட்டிங், ட்ரோன்ஸ், மென்பொருள் திறன் மேம்பாடு, கிளவுட் கம்ப்யூட்டிங் உள்ளிட்ட அனைத்தும் பி.எம்.கே.வி.ஒய். 4.0. பயிற்சித் திட்டத்தில் அடங்கும். இத்திட்டத்தின் திறன் வலைப் பின்னல் பயிற்சியானது பள்ளிகள், கல்லூரிகள், தொழில் பயிற்சி மையங்கள், தொழில் சார்ந்த கட்டமைப்பு மையங்கள், பிரதம மந்திரி திறன் மேம்பாட்டுப் பயிற்சி மையங்கள், தேசிய திறன் மேம்பாட்டு அமைப்பிற்கு உட்பட்டு செயல்படும் தனியார் பயிற்சி மையங்கள் ஆகியவற்றிற்கும் விரிவுபடுத்தப்படும்.

நடப்பு நிதியாண்டில் ஒன்றிய அரசின் திறன் மேம்பாடு மற்றும் தொழில் முனைவோர் அமைச்சகம் நாட்டின் பல்வேறு பகுதிகளில் 30 திறன் மேம்பாட்டுப் பயிற்சி மையங்களை சர்வதேச தரத்தில் ஏற்படுத்த நிதி ஒதுக்கீடு செய்வதற்காக வரவு-செலவுத் திட்ட அறிக்கையில் அறிவிப்பு செய்யப்பட்டுள்ளது. சர்வதேச அளவில் வேலை வாய்ப்புகளைப் பெறத் தேவைப்படும் திறன் இப் பயிற்சி மையங்கள் மூலம் அளிக்கப்படும்.

குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களின் உரிமையாளர்களை ஒன்றிணைத்து இளைஞர்களுக்கு முறையான திறன் மேம்பாட்டு பயிற்சி மற்றும் தொழில் முனைவோர் பயிற்சி அளிப்பதற்கு ஒருங்கிணைந்த திறன் மேம்பாட்டு டிஜிட்டல் தளம் அமைக்க ஒன்றிய அரசின் திறன் மேம்பாடு மற்றும் தொழில் முனைவோர் அமைச்சகம் உத்தேசித்துள்ளது.

ஜன் சிக்ஷான் சன்ஸ்தான் (ஜேஎஸ்எஸ்), தேசிய பயிற்சி மேம்பாட்டுத் திட்டம் (என்ஏபிஎஸ்) தொழில் பயிற்சிக் கூடங்கள் (ஐடிஐ) ஆகியவற்றின் மூலம் இளைஞர்களுக்கு திறன் மேம்பாட்டுப் பயிற்சி அளிக்க பல்வேறு திட்டங்களை ஒன்றிய அரசின் திறன் மேம்பாடு மற்றும் தொழில் முனைவோர் துறை அமைச்சகம் நடைமுறைப்படுத்தி வருகிறது. இத்திட்டங்களைச் செயல்படுத்துவதற்குத் தேவையான நிதி ஒதுக்கீட்டையும் செய்துள்ளது.

- பி.எம்.கே.வி.ஒய். 1.0 திட்டத்தில் 2015-16 ஆம் ஆண்டில் விடுவிக்கப்பட்ட மானியம் ரூ.1335 கோடியாகும். இதில் பயன்படுத்தப்பட்ட தொகை ரூ.1174.48 கோடியாகும்.
- 2016-17 ஆம் ஆண்டில் விடுவிக்கப்பட்ட மானியம் ரூ.550 கோடியாகும். இதில் பயன்படுத்தப்பட்ட தொகை ரூ.129.88 கோடி ஆகும்.
- 2017-18 ஆம் ஆண்டில் விடுவிக்கப்பட்ட மானியம் ரூ.1132.48 கோடி ஆகும். ஆனால் பயன்படுத்தப்பட்ட தொகை ரூ. 2071.24 கோடியாகும்.
- 2018-19 ஆம் ஆண்டில் விடுவிக்கப்பட்ட மானியம் ரூ.1887.96 கோடியாகும். இதில் பயன்படுத்தப்பட்ட தொகை ரூ.1275.18 கோடியாகும்.
- பி.எம்.கே.வி.ஒய். 2.0 திட்டத்தின் கீழ் 2019-20 ஆம் ஆண்டில் விடுவிக்கப்பட்ட மானியம் ரூ.1464 கோடியாகும். பயன்படுத்தப்பட்ட தொகை ரூ.1462.96 கோடியாகும்.
- 2020-21 ஆம் ஆண்டில் விடுவிக்கப்பட்ட மானியம் 1253.58 கோடியாகும். இதில் பயன்படுத்தப்பட்ட தொகை 1083.34 கோடியாகும்.
- 2021-22 ஆம் ஆண்டில் விடுவிக்கப்பட்ட மானியம் ரூ.323 கோடியாகும். ஆனால் செலவிடப்பட்ட தொகை 377.61 கோடியாகும்.
- 2022-23 ஆம் ஆண்டில் செலவிடப்பட்ட தொகை ரூ.111.14 கோடியாகும்.
- பி.எம்.கே.வி.ஒய். 3.0 திட்டத்தின் கீழ் 2021- 22 ஆம் ஆண்டில் விடுவிக்கப்பட்ட மானியம் ரூ. 644.87 கோடியாகும். இதில் செலவிடப்பட்ட தொகை ரூ.179.25 கோடியாகும்.
- 2022-23 ஆம் ஆண்டில் செலவிடப்பட்ட தொகை ரூ.158.87 கோடியாகும் .
- ஆகமொத்தம் விடுவிக்கப்பட்ட மானியம் ரூ.8,590.89 கோடியாகும். செலவிடப்பட்ட தொகை ரூ.8023.95 கோடி ஆகும்.

**பி.எம்.கே.வி.ஒய். திட்டத்தின் கீழ் தமிழ்நாட்டில் பயிற்சி பெற்ற மாணவர்கள் விவரம்:**

- 1915-16 நிதியாண்டில் பயிற்சி பெற்ற மாணவர்கள் எண்ணிக்கை 1,40,990.
- 1916-17 நிதியாண்டில் பயிற்சி பெற்ற மாணவர்கள் எண்ணிக்கை 68,946.
- 1917-18 நிதியாண்டில் பயிற்சி பெற்ற மாணவர்கள் எண்ணிக்கை 1,31,710.
- 1918-19 நிதியாண்டில் பயிற்சி பெற்ற மாணவர்கள் எண்ணிக்கை 1,23,422.
- 1919-20 நிதியாண்டில் பயிற்சி பெற்ற மாணவர்கள் எண்ணிக்கை1,85,108.
- 1920-21 நிதியாண்டில் பயிற்சி பெற்ற மாணவர்கள் எண்ணிக்கை 72,404
- 1921-22 நிதியாண்டில் பயிற்சி பெற்ற மாணவர்கள் எண்ணிக்கை 29,057.
- 1922-23 நிதியாண்டில் பயிற்சி பெற்ற மாணவர்கள் எண்ணிக்கை 8029.
- ஆக மொத்தம் தமிழ்நாட்டைப் பொருத்தவரை பயிற்சி பெற்ற மாணவர்கள் எண்ணிக்கை 7,59,666.
- நாடு முழுவதும் பயிற்சி பெற்ற மாணவர்கள் எண்ணிக்கை 1,37,24,196 ஆகும்.

******